இனிமையான குழந்தைகளே ! நீங்கள் உங்கள் அதிர்ஷ்டத்தை வைரம் போன்று மாற்றிக் கொள்ள வேண்டும், முயற்சி செய்து பாபாவிடமிருந்து சொர்க்கத்தின் முழு சொத்தையும் அடைய வேண்டும்.

கேள்வி: எந்த இரகசியம் புத்தியில் யுக்தியுடன் பதிந்து விட்டால் அளவற்ற குஷி இருக்கும்?

பதில்: நாடகம். இந்த நாடகத்தில் ஒவ்வொரு நடிகரும் அழிவற்ற நடிப்பை நடித்துக் கொண்டி ருக்கிறார்கள். அதை நடித்தே தான் ஆக வேண்டும். யாருடைய நடிப்பும் அழிவதோ மறைவதோ கிடையாது. ஏற்கனவே உருவாக்கபட்ட நடந்துக் கொண்டிருக்கின்ற..... இதில் ஒரு துளி கூட மாற்றம் ஏற்படாது. கல்பம் முடிந்து போனால் மீண்டும் அதே நடிப்பு ஒவ்வொரு நொடியும் திரும்ப நடக்கும். இது மிகவும் ஆழமான இரகசியம் ஆகும். இவை யுக்தியுடன் புத்தியில் பதிந்து விட்டால் குஷி இருக்கும். இல்லையென்றால் குழப்பம் அடைகிறார்கள். குழந்தைகளே குழப்பம் அடையாதீர்கள் என பாபா கூறுகிறார். பாபா மீது நிச்சயம் வைத்து முழு சொத்தையும் அடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

பாடல்: உங்களை அடைந்த நாங்கள்.....

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான ஈஸ்வரிய குழந்தைகள் பாடலைக் கேட்டீர் கள். நாடகத்தின்படி நீங்கள் இப்போது ஈஸ்வரனின் குழந்தையாகி இருக்கிறீர்கள் என்பது புரிய வருகிறது. ஈஸ்வரனிடமிருந்து நீங்கள் சொர்க்கத்தின் அதிபதியாகுவதற்ககாக வந்திருக்கிறீர் கள். மேலும் சுய இராஜ்யத்தை அடைவதற்காக வந்திருக்கிறீர்கள். சொர்க்கம் என்றால் என்ன? என்பதை நரகத்தில் உள்ள மனிதர்கள் அறியவில்லை. பாபா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கிறார் என்பதை அறிகிறீர்கள். பிறகு இராவணன் நரகத்தை ஸ்தாபனை செய்கிறான். இதையும் யாரும் அறியவில்லை. நாம் பாபாவிடமிருந்து சொர்க்கத்தின் இராஜ்ய பதவியை அடைந்துக் கொண்டிருக் கின்றோம் என நீங்கள் அறிகிறீர்கள். யாராவது மனிதர்கள் இறந்து விட்டால் சொர்க்கத்திற்குச் சென்று விட்டனர் என்று கூறுகிறார்கள். அப்படி என்றால் நாங்கள் நரகத்தில் இருக்கிறோம். அனைவரும் நரகத்திற்கு அதிபதியாக இருக்கிறார்கள் என தங்களை கூறிக் கொள்கிறார்கள். இது முற்றிலும் எளிதான விஷயம் ஆகும். குழப்பம் அடைவதற்கு அவசியம் இல்லை. உங்களுடைய அதிர்ஷ்டம் இப்போது வைரம் போன்று மாறிக் கொண்டிருக் கின்றது. வைரம் போன்ற அதிர்ஷ்டத்தை பாபாவைத் தவிர வேறு யாரும் உருவாக்க முடியாது. பாபாவிடமிருந்து நாம் சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைந்துக் கொண்டிருக்கிறோம் என நீங்கள் அறிகிறீர்கள். நரகம் எவ்வளவு காலம் இருக்கிறது. யாருக்காவது புரிய வைத்தால் சத்யுகம் லட்சக்கணக்கான வருடங்கள் இருந்தது என கூறுகிறார்கள். நீங்கள் இறை தந்தையின் மாணவர்கள். இறை தந்தையின் மூலமாக சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைந்துக் கொண்டிருக் கிறீர்கள். சிவபாபாவை ஏன் மறந்து விட்டீர்கள். இது பாபாவிற்குப் புரிய வில்லை. புயல் நிறைய வரும். உழைப்பே இல்லாமல் நீங்கள் சொர்க்கத்திற்கு அதிபதியாகி விடுவீர்களா? யாராவது இறந்தால் சொர்க்கவாசி ஆகி விட்டார்கள் என கூறி விடுகிறார்கள். பிறகு ஏன்

அழுகிறீர்கள்? நீங்கள் கரவொலி எழுப்ப வேண்டும். மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும். சொர்க்கத்திற்குச் செல்வது இவ்வளவு எளிது என்றால், அனைவரையும் சுட்டுவிட்டால் சொர்க்கத்தில் சென்று சேர்ந்து விடுவார் கள். பிறகு இங்கே துக்கத்தில் இருக்க வேண்டிய அவசியம் என்ன? துக்கத்தில் மனிதர்கள் விஷத்தை அருந்தி இறந்து போகிறார்கள். எத்தனை சிப்பாய்கள் இறக்கிறார்கள். ஒருவருக் கொருவர் அடித்துக் கொள்கிறார்கள். சொர்க்கத்திற்குச் சென்று விட்டனர் என்றால், நீங்கள் ஏன் அழுகிறீர்கள் என அனைவருக்கும் புரிய வையுங்கள் என்று பாபா கூறுகிறார். உண்மையில் யாரும் சொர்க்கத்திற்குப் போக முடியாது. நிர்வாண தாமத்திற்கும் திரும்பிச் செல்ல முடியாது. இப்போது நீங்கள் சொர்க்கத்திற்குச் செல்வதற்கான வழியை பாபா தான் தெரிவிக்கிறார். சொர்க்கத்தைப் படைப்பவர் சொர்க்கத்தைப் படைக்கும் போது தான் சொர்க்கத்திற்கு போக முடியும் அல்லவா? இப்போது சொர்க்கத்தைப் படைப்பவர் தந்தை வந்திருக்கிறார். இது கூட குழந்தைகளாகிய நீங்கள் அறிகிறீர்கள். இராவண இராஜ்ஜியம் ஆரம்பமாகும் போது தான் தேவி தேவதைகள் வாம மார்க்கத்தில் செல்கின்றனர். அச்சமயத் திலிருந்து விகாரம் ஆரம்பம் ஆகின்றது. இராவண இராஜ்யம் எப்போது ஆரம்பம் ஆகின்றது. அதற்கான நாள் நிச்சயிக்க படவில்லை. குழந்தைகளாகிய நீங்கள் பாபா இவருக்குள் எப்போது பிரவேசமாகினார் என்று கூற முடியாது. சாட்சாத்காரம் கிடைக்கும் போது வந்தாரா அல்லது எப்போது? பக்தி மார்க்கத்தில் கூட இவ்வாறு காட்சிகள் கிடைக்கிறன்றன பாபா எப்போது வந்தார் என்பது தெரியவில்லை. கிருஷ்ணர் வரக் கூடிய நாளைக் காண்பிக் கிறார்கள். சிவபாபாவின் நேரம் எதுவும் தெரியவில்லை. பாபா அதிபதியாக இருக்கிறார், எப்போது வருகிறார் என்பது தெரியவில்லை. இங்கே முரளியினால் புரிந்துக் கொள்கிறார்கள்.

நான் காலனுக்கெல்லாம் காலனாக இருக்கிறேன், நான் அனைவரையும் திரும்ப அழைத்துச் சென்றேன் என பாபா புரிய வைக்கிறார். சத்யுகத்தில் மிகச் சிலரே இருந்தனர். கலியுகத்தில் எவ்வளவு மனிதர்கள் இருக்கிறார்கள். அனைத்து ஆத்மாக்களும் திரும்பிச் செல்ல வேண்டும். அழைத்துச் செல்வதற்கு நிச்சயம் வழி காட்டி வேண்டும். நான் ஆன்மீக வழிகாட்டியாக உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன். புதிய உலகத்திற்காக உங்களைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். நரகம், சொர்க்கம் என்றால் என்ன? எவ்வளவு காலம் இருக்கிறது. எப்போது ஆரம்பம் ஆகிறது. எந்த ஒரு சன்னியாசியும் அறியவில்லை. படைப்பவர் ஒருவரே சிருஷ்டியும் ஒன்றே. சாஸ்திரங்களில் மேலே கீழே என பல சிருஷ்டிகளை உருவாக்கி விட்டனர். அதைத் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு நட்சத்திரத்திலும் உலகம் இருக்கிறது என நினைக்கிறார்கள். நான் மீண்டும் உங்களுக்கு கீதா ஞானத்தைக் கூறுகிறேன் என பாபா கூறுகிறார். கிறிஸ்து தனது நேரத்தில் வர வேண்டும். நாடகம் ஒன்று தான். சத்யுகத்தில் தேவி தேவதா இராஜ்யத்தைத் தவிர வேறு எதுவும் கிடையாது. இப்போது நாம் பாபாவிடமிருந்து ஆஸ்தியை அடைய வந்திருக்கிறோம் என நீங்கள் அறிகிறீர்கள். பதீத பாவனா வாருங்கள்! என நினைக்கிறார்கள். சங்கமயுகத்தில் தான் நிச்சயம் வர வேண்டி யிருக்கும், இப்போது நாம் இங்கே ஏன் வந்திருக்கிறோம்? என்ன அடைய வந்திருக்கிறோம் என அறிகிறீர்கள். நாங்கள் பாபாவினுடைய ஆஸ்தியை அடைய வந்திருக்கிறோம் என நீங்கள் கூறுவீர்கள். நாம் இராஜயோகத்தைக் கற்றுக்

கொண்டிருக்கின்றோம். கல்ப கல்பமாக அடைகிறார்கள். மற்றும் இழக்கிறார்கள். இப்போது மீண்டும் முயற்சி செய்ய வேண்டும். முழு ஞானமும் எடுத்து மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும். இல்லை என்றால் எப்படி வளர்ச்சி அடையும். பாட்டு எவ்வளவு நன்றாக இருக்கின்றது. இதனுடைய பொருளை குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிந்துக் கொள்கிறீர்கள். பாட்டு எவ்வளவு இனிமையாக இருக்கிறது என உங்கள் மனதில் தோன்றுகிறது. பாபா உங்களிடமிருந்து யாருமே பறிக்க முடியாத இராஜ்ஜியத்தை அடைகின்றோம். இது அழிவற்ற சொத்து, அழிவற்ற தந்தையிடமிருந்து கிடைக்கிறது. அனாதி உலக நாடகத்தின் படி மற்றும் கீதையில் கூறியுள்ள படி மீண்டும் பாபா கீதையைக் கூறுவதற் காக வந்திருக்கிறார். இதில் இராஜயோகத்தைக் கற்பித்தார். சாஸ்திரங்களில் இல்லாதது பொல்லாததை கூறிவிட்டனர். யுக்தியுடன் புரிய வைக்க வேண்டும். ஜோதியோடு ஜோதியாக ஐக்கியமாகி விட்டனர் என சிலர் கூறுகின்றனர். ஆத்மா அழிவற்றது. அதனுடைய நடிப்பும் அழிவற்று நடிக்க வேண்டும். அதனுடைய பார்ட் ஒரு போதும் மறையாது. ஒரு போதும் அழிக்க முடியாது. ஏற்கனவே நிச்சயிக்கபட்ட, நடந்துக் கொண்டிருக்கின்ற..... அதில் மாற்ற முடியாது. எவ்வளவு அதிசயமாக இருக்கிறது. இவ்வளவு சிறிய ஆத்மாவில் அழிவற்ற பாகம் நிரம்பி இருக்கிறது. கல்பம் முடிந்ததும் மீண்டும் இதே போன்று திரும்ப நடக்கும். ஒவ்வொரு நொடியும் அப்படியே கடந்து போகும். நாடகத்தை முழுமையாக யுக்தியோடு புரிந்துக் கொள்ள வேண்டும். சிலரோ இந்த விஷயங்களில் குழப்பம் அடைகிறார்கள். முதலில் தந்தையின் மீது நிச்சயம் ஏற்பட வேண்டும். அதாவது தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. கல்ப கல்பமாக பாரதத்திற்குத் தான் கிடைக்கிறது. 84 பிறவிகள் எடுக்க வேண்டியிருக்கிறது. வர்ணங்களைப் பற்றிக் கூட நிச்சயம் புரிய வைக்க வேண்டும். ஒருவருக்கொருவர் எல்லையற்ற தந்தையிட மிருந்து எல்லையற்ற ஆஸ்தி கிடைக்கிறது என்பதை நினைவு படுத்த வேண்டும். அனைவரும் வந்து படிக்க மாட்டார்கள். பார்த்துக் கொண்டே இருங்கள். சென்டர் திறந்துக் கொண்டே போவார்கள். அங்கே நரக வாசிகள் வந்து சொர்க்கவாசியாக மாறுகிறார்கள். நாங்கள் ஏற்பாடு களை செய்கிறோம் எங்களுக்கு எந்த பொருளிலும் பற்று இல்லை. இது அனைத்தும் ஈஸ்வரனுக்காகத்தான். இப்போது தாங்கள் ஆலோசனை வழங்குங்கள் என பாபாவிற்கு எழுது கிறார்கள். தங்களுக்குள் ஆலோசனை செய்யுங்கள். எங்கே நல்ல இடம் கிடைக்கிறதோ அங்கே சென்டர் திறங்கள். குழந்தைகள் தைரியம் வைத்தால் பாபாவின் உதவி கிடைக்கும். பாபா எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார். இப்படிப்பட்ட தானம் செய்தால் பலர் கிளிஞ்சல்களில் இருந்து வைரம் போன்று மாறுவார்கள் என மனதில் தோன்றுகிறது. இது மிகப் பெரிய மருத்துவ மனையாகவும் இருக்கிறது. கல்லூரியாகவும் இருக்கிறது. மூன்றடி நிலம் வேண்டும். எவ்வளவு எளிதாக பாபா கிளிஞ்சலில் இருந்து வைரமாக மாற்றுகின்றார். இப்படிப்பட்ட பாபா எவ்வளவு சாதாரணமாக இருக்கிறார்.? பாருங்கள், எங்கே வந்திருக்கிறார். எந்த ஒரு இராஜாவிடமும் ஏன் வரவில்லை. நான் சாதாரண வயதான உடலில் வருகிறேன் என கூறுகிறார். அவர் 84 பிறவிகளைத் துல்லியமாக முடித்திருக்கிறார். சத்யுகத்தில் முதல் இளவரசன் இவர் அல்லவா? இவருடைய பெயரே சியாம் சுந்தர் என வைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் இதனுடைய பொருளையும் அறிந்துக் கொள்கிறீர்கள். அவர்கள் பொருளை புரிந்துக் கொள்ளாத காரணத்தால் கருப்பாக்கி விட்டனர். சிவபாபாவின் லிங்கமும் முக்கியமாக கருப்பாக இருக் கிறது. கிருஷ்ணர்,

இராமரைக் கூட கருப்பாகக் காட்டி விட்டனர் ஒரு புறம் வெள்ளை இன்னொரு புறம் கருப்பாக ஏன் காண்பித்துள்ளனர்? ஜகன்நாத் கோவிலில் முகத்தை ஆப்ரிக்க மக்களைப் போன்று (கருப்பாக) காண்பிக் கின்றனர். சில இடங்களில் நாராயணனையும் கருப்பாக காட்டி விட்டனர். எங்கேயோ லஷ்மியை கூட இவ்வாறு காட்டியிருக்கின்றனர். மனிதர்களின் புத்தி எப்படி இருக்கிறது என இப்போது அதிசயாக இருக்கிறது. பாபா தான் சத்தியமான வழியை, தன்னை சந்திப் பதற்காகக் கொடுக்கிறார். மற்றபடி தியாகம், தவம், தானம், புண்ணியம் போன்றவைகளை செய்கிறார்கள். இலவசமாக பணத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பிறகு பதீத பாவனா வாருங்கள் என்று ஏன் கூற வேண்டும். எதற்காக நினைக்கிறார்கள். கங்கை, யமுனை, கால்வாய் என எத்தனை இருக்கின்றது. பாபா நிறைய தீர்த்த யாத்திரை செய்திருக்கிறார். இப்போது மிகவும் அன்பான அதிர்ஷ்ட நட்சத்திரங்களாகிய நீங்கள் நரகத்தை சொர்க்கமாக மாற்றிக் கொண்டிருக் கிறீர்கள். மனிதர்கள் இறந்து விட்டால், சொர்க்கத்திற்குச் சென்று விட்டனர் என கூறுகிறார்கள். சொர்க்கம் என்று எதற்குக் கூறுகிறோம் என அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். எங்களுக்கு புரிகின்றது, அதனால் தான் புரிய வைக்கின்றோம். எங்களுக்கு சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடிய தந்தை கிடைத்திருக் கிறார். அந்த ஞானத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறோம் எங்களுக்கு யாரும் மனித குரு கிடையாது. சத்குரு ஒரேயொரு பாபா தான் அவரே பதீத பாவனர் ஆவார். அவரைத்தான் அழைக் கிறார்கள். நிராகாரரைத் தான் அழைக்கிறார்கள் இல்லையா? அவரைத் தான் நீங்கள் ஞானக்கடல் என்கிறீர்கள். அவர் சத்சித் ஆனந்த சொரூபமானவர். ஞானத்தின் கடல். நமக்கு ஞானம் இல்லை. பார்த்தோம் என்றால், அவரிடம் என்ன ஞானம் இருக்கிறதோ அது யாரிடமும் இல்லை. உங்களுக்கு எவ்வளவு குஷி எற்பட வேண்டும். பதீத பாவனர் இறை தந்தை நம்மை படிக்க வைக்கின்றார். அவர் நம்முடைய தந்தை, டீச்சர், சத்குருவாக இருக்கிறார். இதில் ஏமாற்றம் அடையக் கூடிய விஷயம் எதுவும் இல்லை. தங்களின் படைப்புகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இங்கேயே வந்து அமர்ந்துக் கொண்டால் அது சன்னியாசிகளின் ஞானம் ஆகிவிடும். குடும்ப விவகாரத்தில் இருந்துக் கொண்டே ஒரு மணி நேரம், அரை மணி நேரம் ஒதுக்கலாம். முதலில் ஏழு நாட்கள் பட்டியில் இருக்க வேண்டும். ஏழு நாட்கள் யாருடைய நினைவும் வரக் கூடாது. யாருக்கும் கடிதம் எழுதக் கூடாது. முற்றிலும் அனைவரையும் மறந்து போக வேண்டும். நீங்கள் பல வருடங்களாக பட்டியில் இருந்திருக்கிறீர்கள். இருப்பினும் அதிர்ஷ்டம். நீங்கள் பல வருடங்களாக பட்டியில் இருந்தீர்கள். சிலரை மாயை இழுத்துக் கொள்கிறது. மாயை இவ்வளவு வலிமையாக உள்ளது.

குழந்தைகளே ! மெல்ல மெல்ல பரிபக்குவ நிலைக்கு வந்துக் கொண்டே இருங்கள் என பாபா கூறுகிறார். நாம் 84 பிறவிகளை முடித்துவிட்டோம் என அறிகிறீர்கள். உங்களுடைய புத்தியில் முழு மரமும் இருக்கிறது. அனைத்து தர்மமும் இருக்கிறது. அங்கே கூட தனித்தனி பிரிவுகள் உள்ளன. இங்கேயும் இப்படித் தான்! அங்கேயும் இப்படி தான்! மற்றபடி மோட்சம் யாருக்கும் கிடைக்காது. நீர்குமிழி போல ஆத்மா பரமாத்மாவுடன் கலந்து விடாது. அப்படி கலந்து விட்டால் அனைத்து நடிப்பும் முடிந்து போகும். அனைவரும் ஜோதியோடு ஜோதியாக கலந்து விடலாம் என்றால் விளையாட்டே நடக்காது. இது அனைத்தும் பொய்யாகும். பொய் என்றால் முற்றிலும் பொய். உண்மை

ஒரு துளியும் இல்லை. பக்தியில் வாய் இனிக்குமா? வாயை யார் இனிப்பாக மாற்றுகிறார்கள் என நீங்கள் அறிகிறீர்கள். எனவே பாபாவின் படிப்பில் கவனம் கொடுக்க வேண்டும். பழைய உலகத்தைப் பார்த்து மயங்கிவிடக் கூடாது. தேக உணர்வில் வராதீர்கள். தங்களின் மூட்டை முடிச்சுகளை தயார் செய்து மாற்றம் செய்துவிடுங்கள். இப்போது இந்த பழைய உலகம் அழியப் போகிறது. அனைத்தையும் காப்பீடு செய்து விடுங்கள் என பாபா கூறுகிறார். பக்தி மார்க்கத்தில் செய்கிறீர்கள் என்றால், அல்ப கலத்திற்கு பலன் கிடைக்கிறது. ஈஸ்வரன் கொடுத்தார் என நினைக்கிறார்கள். இப்போது நீங்களும் கொடுக்கிறீர்கள் என்றால், பாபா திரும்பக் கொடுக்கிறார். நேரடியாக இருக்கும் காரணத்தால் உங்களுக்கு 21 பிறவிகளுக்கு காப்பீடு கிடைக்கிறது. பாருங்கள் நான் முழு காப்பீடு செய்வதால் முழு இராஜ்ஜியம் கிடைக்கிறது. அது இந்த உலகத்தின் காப்பீடு. இது இந்த ஆன்மீக தந்தையினுடையது. ஈஸ்வரனின் பெயரில் தானம் செய்கின்றார்கள் அல்லவா? எனவே ஈஸ்வரன் திரும்ப அளிக்கிறார், அவரோ பக்தி மார்க்கத்திலும் வள்ளலாக இருக்கிறார். ஞான மார்க்கத்திலும் வள்ளலாக இருக்கிறார். இது எல்லையற்ற இராஜ்ஜியத்தை அடைவதற்கான எல்லையற்ற படிப்பாகும். இப்போது எவ்வளவு முடியுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தின் இராஜ்ஜிய பதவி அடையலாம். முயற்சிக்கு வெற்றி உண்டு. வெற்றி மாலையில் இடம் பெற முயற்சி செய்யுங்கள். குழப்பமாக இருந்தால் ஆலோசனை வழங்குவதற்கு சர்ஜன் அமாந்திருக்கிறார். நீங்கள் பல முறைகள் இராஜ்யத்தை அடைந்தீர்கள், இழக்கவும் செய்தீர்கள் என உங்களுக்குத் தெரியும். இந்த ஞானம் இப்போது தான். சத்யுகத்தில் மீண்டும் மறந்து போகும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பழைய உலகத்தைப் பார்த்து மயங்கிப் போகக் கூடாது. தன்னுடைய மூட்டை முடிச்சுகளை மாற்றம் செய்ய வேண்டும் தன்னுடைய அனைத்தையும் காப்பீடு செய்ய வேண்டும்.

2. எந்த ஒரு பொருளிலும் பற்று வைக்க வில்லை என்றால், சோழியி-ருந்து வைரமாக மாற்றக் கூடிய சேவை செய்ய வேண்டும். தானம் செய்வதினாலும் ஞானச் செல்வம் பெருகும்.

வரதானம் : கருவி (நிமித்தம்) என்ற தன்மையின் நினைவு மூலமாக ஒவ்வொரு பேப்பரிலும் பாஸ் ஆகி விடக் கூடிய எவர்ரெடி நஷ்டோ மோகா ஆவீர்களாக.

எவர்ரெடி என்பதன் பொருளே - நஷ்டோமோகா ஸ்மிருதி சொரூபம். அந்த நேரத்தில் எந்தவொரு உறவினர் அல்லது பொருள் நினைவிற்கு வரக் கூடாது. எதன் மீதும் பற்றுதல் இல்லாதிருக்க வேண்டும். எல்லாவற்றிலிருந்தும் ந்யரா (விலகியிருத்தல்) மற்றும் அனை வருக்கும் ப்யாரா (பிரியமானவராக இருத்தல்). இதற்கான எளிய புருˆôர்த்தம் (முயற்சியே) நிமித்த பாவம் - கருவி என்ற உணர்வு. கருவி என்று உணர்ந்திருக்கும் பொழுது கருவியாக ஆக்கியவர் நினைவிற்கு

வருகிறார்.என்னுடைய குடும்பம், என்னுடைய வேலை - இல்லை. நான் கருவி ஆவேன். இந்த கருவி என்ற தன்மையின் நினைவு மூலமாக ஒவ்வொரு பேப்பரிலும் பாஸ் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: பிரம்மா தந்தையின் சம்ஸ்காரத்தை தனது சம்ஸ்காரமாக ஆக்கி கொள்வது தான் ஃபாலோ ஃபாதர் - தந்தையை பின்பற்றுவது ஆகும்.